**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள், சென்னை –06.**

**முன்னிலை . முனைவர். வெ.ஜெயக்குமார்**

**ந.க.எண். 03045/எப்/இ1/2026 நாள். .03.2026**

1275

**பொருள்** அரசுப் பள்ளிகளில் உள்ள மின்னணு கழிவுப்பொருட்கள் (E – Waste) முறையற்ற விதத்தில் விற்பனை செய்யப்பட்டதாக விவரம் பெறப்பட்டது உரிய நடவடிக்கை மேற்கொள்ள செய்தல் – சார்ந்து

**பார்வை** முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார். TN/ SCHOOL/ CHN/ I/ CMCELL/ 16FEB26/ 17289927/16/02/2026.

........

முதன்மைக் கல்வி அலுவலர் ... பெறப்பட்டது 18 MAR 2026

மேற்காண் பொருளைச் சார்ந்து, பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் அரசுப் பள்ளிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சேமித்து வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த கணினிகள், மானிட்டர்கள், UPS கருவிகள், பயன்பாடற்ற (Condemned) பேட்டரிகள் உள்ளிட்ட மின்னணு கழிவுப்பொருட்கள் (E–Waste) முறையான கணக்காய்வு நடைமுறைகள் இன்றி விற்பனை செய்யப்பட்டதாக தகவல்கள் பெறப்பட்டுள்ளது.

எனவே தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பழுதடைந்த கணினிகள், மானிட்டர்கள், UPS கருவிகள், பேட்டரிகள் உள்ளிட்ட பயன்பாடற்ற மின்னணு கழிவுப்பொருட்கள் (E–Waste) முறையான கணக்காய்வு செய்து, https://tnpcb.gov.in/eWaste.php இணையதளத்தில் வழிகாட்டுதலின்படி தெரிவிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் மூலம், மின்னணு கழிவுப்பொருட்களை அகற்றிடவும், அவற்றை விற்பனை செய்திடவும், அதனுடைய விவரங்களை தனிப்பட்ட பதிவேட்டில் பராமரிக்குமாறும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

**பெறுநர்,**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண் 1275 / அ5 / 2026 நாள் 02.04.2026

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்-632 009.